**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு**
**புகையிரத வினைத்திறனை மேம்படுத்தும் கருத்திட்டம்**
**கருத்திட்ட பதவியணியினர் வெற்றிடங்கள்**

இவ்வமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற புகையிரத வினைத்திறனை மேம்படுத்தும் கருத்திட்டத்திற்காக, கருத்திட்டப் பதவியணியை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக, இலங்கை அரசாங்கத்தின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 02/2026 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் நிபந்தனைகளுக்கு அமைவாக, ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் வெற்றிடங்களுக்குத் தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

புகையிரத வினைத்திறனை மேம்படுத்தும் கருத்திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனுதவியின் கீழ், இவ்வமைச்சும் இலங்கை புகையிரத திணைக்களமும் இணைந்து செயற்படுத்துகின்றன.

| **இலக்கம்** | **பதவி** | **சம்பளக் குறியீடு** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 1. | பிரதி கருத்திட்டப் பணிப்பாளர் (காணிகளைக் கையகப்படுத்துதல்) | B | 01 |
| 2. | பிரதி கருத்திட்டப் பணிப்பாளர் (பொறியியல்) | B | 01 |
| 3. | பிரதி கருத்திட்டப் பணிப்பாளர் (கண்காணிப்பும் மதிப்பீடும்) | B | 01 |
| 4. | பெறுகை நிபுணர் | C | 01 |
| 5. | உதவிக் கருத்திட்டப் பணிப்பாளர் (காணி) | C | 01 |
| 6. | உதவிக் கருத்திட்டப் பணிப்பாளர் (சமூகப் பாதுகாப்பு) | C | 01 |
| 7. | உதவிக் கருத்திட்டப் பணிப்பாளர் (பொறியியல்) - (மு.சே.சு. 02/2026 இன் D பிரிவின் பொறியியலாளர் III இன் கீழ்) | D | 01 |
| 8. | சிரேஷ்ட சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் | E | 02 |
| 9. | சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் | F | 02 |
| 10. | காணி உத்தியோகத்தர் | F | 01 |

| சம்பளக் குறியீடு மற்றும் பதவிப் பெயர்கள் | தேவையான அடிப்படைத் தகைமைகள் |
|---|---|
| B<br><br>பிரதி கருத்திட்டப் பணிப்பாளர் பதவிப் பெயர்களுக்காக | பின்வரும் உப இலக்கங்கள் 01, 02 அல்லது 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஏதேனும் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்<br><br>**01.** சம்பந்தப்பட்ட துறையில் ஒரு பட்டம்<br><br>மற்றும்<br><br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின் பட்டம் / சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட இணை அங்கத்துவம் / அதற்கு இணையான தொழில்சார் தகைமை.<br><br>அத்துடன்<br><br>சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 11 வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அதில், 5 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் பெற்ற அனுபவமாக இருத்தல் வேண்டும்.<br><br>**02.** சம்பந்தப்பட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட முழு அங்கத்துவம் பெற்றிருத்தல்.<br><br>அத்துடன்<br><br>முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 9 வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அதில், 4 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் பெற்ற அனுபவமாக இருத்தல் வேண்டும்.<br><br>**03.** அரசாங்கத்தின் நாடளாவிய சேவையொன்றின் வகுப்பு I உத்தியோகத்தராக இருத்தல் / சம்பந்தப்பட்ட துறையில் அதற்கு இணையான தகைமைகளைப் பெற்றிருத்தல்.<br><br>மற்றும்<br><br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின் பட்டத் தகைமையையோ /அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றின் இணை அங்கத்துவத்தையோ அல்லது அதற்கு இணையான தொழில்சார் நிறுவனமொன்றில் தொழில்சார் கல்வித் தகைமையையோ பெற்றிருத்தல்<br><br>அத்துடன்<br><br>வகுப்பு I பதவியொன்றில் ஆகக்குறைந்தது 4 வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான தகைமையை சம்பந்தப்பட்ட துறையில் பெற்றிருத்தல். |

| | |
|---|---|
| C<br>பெறுகை நிபுணர், உதவிக் கருத்திட்டப் பணிப்பாளர் (சமூகப் பாதுகாப்பு) மற்றும் உதவிக் கருத்திட்டப் பணிப்பாளர் (காணி) ஆகிய பதவிகளுக்காக | பின்வரும் உப இலக்கங்கள் 01 அல்லது 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனும் ஒன்றை பூர்த்தி செய்திருத்தல்<br><br>01. சம்பந்தப்பட்ட துறையில் ஒரு பட்டம்<br>மற்றும்<br><br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின் பட்டம் / அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் இணை அங்கத்துவம் பெற்றிருத்தல்.<br><br>அத்துடன்<br>சம்பந்தப்பட்ட துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 10 வருட சேவை அனுபவம்<br>02. அரசாங்கத்தின் நாடளாவிய சேவையொன்றின் வகுப்பு I உத்தியோகத்தராக இருத்தல் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அதற்கு இணையான மட்டத்திலான உத்தியோகத்தராக இருத்தல்.<br>மற்றும்<br><br>சம்பந்தப்பட்ட துறையில் பட்டப்பின் பட்டத் தகைமை பெற்றிருத்தல்.<br><br>அத்துடன்<br>வகுப்பு I பதவியில் குறைந்தபட்சம் 03 வருட சேவை அனுபவம் பெற்றிருத்தல் அல்லது சம்பந்தப்பட்ட துறையில் அதற்கு இணையான மட்டத்திலான தகைமையைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| D வகை பொறியியலாளர் III இன் கீழ் உள்ள பதவிக்கு மட்டும். | கீழுள்ள உப இலக்கம் 01 மட்டும்<br><br>01. தொடர்புடைய துறையில் பட்டம் ஒன்றை / துறைக்கு தொடர்புடையதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான தகைமையொன்றை பெற்றிருத்தல்<br>அத்துடன்<br><br>இணை உறுப்புரிமை / அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட அதற்கு சமமான தகைமையொன்றை பெற்றிருத்தல். |
| E<br>சிரேஷ்ட சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் | பின்வரும் உப இலக்கங்கள் 1, 2 அல்லது 3 இல் ஏதேனும் ஒரு தகைமையைப் பெற்றிருத்தல்.<br>01. தொடர்புடைய துறையில் பட்டம் ஒன்றை / தொடர்புடைய துறையில் முதல் பட்டத்திற்கு இணையான தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமையொன்றை பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிலையமொன்றினால் |

| | |
|---|---|
| | வழங்கப்பட்ட தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சிக்கான சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>மற்றும்<br><br>தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 4 வருட அனுபவத்தை பெற்றிருத்தல்.<br><br>02. மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிலையமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) 6ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சிக்கான சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>மற்றும்<br><br>தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 7 வருட அனுபவத்தை பெற்றிருத்தல்.<br><br>03. மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிலையமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) 5ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சிக்கான சான்றிதழொன்றை பெற்றிருத்தல்.<br>மற்றும்<br><br>தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 10 வருட அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். |
| F<br><br>சமூக பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் காணி உத்தியோகத்தர் | பின்வரும் உப இலக்கங்கள் 01, 02 அல்லது 03 இல் ஏதேனும் ஒரு தகைமையைப் பெற்றிருத்தல்.<br><br>01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் பட்டமொன்றை பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிலையமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) 7 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சிக்கான சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அத்துடன்<br><br>தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 03 வருட சேவை அனுபவத்தை பெற்றிருத்தல். |

| | |
|---|---|
| | மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிலையமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) 6 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சிக்கான சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அத்துடன்<br><br>தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 06 வருட சேவை அனுபவத்தை பெற்றிருத்தல்.<br><br>03.மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப / தொழிற்பயிற்சி நிலையமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்திறன் தகுதி (NVQ) 5 ஆம் மட்டத்திற்கு குறையாத தேர்ச்சிக்கான சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அத்துடன்<br><br>தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 09 வருட சேவை அனுபவத்தை பெற்றிருத்தல். |

<u>சம்பள எல்லை</u>

B – 370,000 – 390,000

C – 305,000 – 325,000

D – 180,000 - 200,000 (பொறியியலாளர் III)

E – 190,000 – 205,000

F – 160,000 – 175,000

<u>பொது நிபந்தனைகள்</u>

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடப் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் வயது 64 இற்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.
2. ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைவரும், சம்பந்தப்பட்ட அரச அமைப்புகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டு தமது கடமைகளை நிறைவேற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.
3. நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களில் பணியாற்றிய அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
4. ஆங்கில மொழித்தேர்ச்சி, அரச ஒழுங்குவிதிகள் பற்றிய அனுபவம் மற்றும் கணினி அறிவு என்பன மேற்குறிப்பிட்ட பதவிகளுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகளாகும்

5. அரச அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களின் விண்ணப்பங்கள் தெரிவுசெய்யப்பட்டால், சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரரை விடுவிக்க இயலுமா என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டு, அந்தந்த தாபனத் தலைவர்களின் ஊடாகவே அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
6. முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் 2026/02 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைவாகக் கொடுப்பனவுகளுடன் கூடிய சம்பளம் வழங்கப்படும். ஊழியர் தனது மாதாந்தச் சம்பளத்திலிருந்து 8% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும். அதேவேளை, தொழில்தருநர் 12% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், 3% ஐ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்வார்.

**<u>விண்ணப்பங்கள்</u>**

7. தகைமையுள்ள விண்ணப்பதாரர்கள், அப்பதவிகளுக்கான தங்களது பொருத்தப்பாடு /தகைமைகளை எடுத்துக்காட்டும் முகப்புக் கடிதத்துடன் (Covering Letter), உறவினர்கள் அல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் தொடர்பு விபரங்கள் அடங்கிய பூரணப்படுத்தப்பட்ட சுயவிபரக் கோவை, அத்துடன் கல்வி, தொழில்சார் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் ஆகியவற்றுடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தவறும்பட்சத்தில், அவ்வாறான விண்ணப்பங்கள் தெரிவுக்காகப் பரிசீலிக்கப்பட மாட்டாது.

8. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை, தங்களது கல்வி, தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவங்களை எடுத்துக்காட்டும் சுயவிபரக் கோவையுடனும், உறவினர்கள் அல்லாத இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்களுடனும், 2026 ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பின்வரும் முகவரிக்குக் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தயவு செய்து விண்ணப்பிக்கப்படும் பதவியின் பெயரைக் கடித உறையின் இடது மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

**தபால் முகவரி:** கருத்திட்டப் பணிப்பாளர், கருத்திட்ட முகாமைத்துவ அலகு, கொழும்பு புறநகர் புகையிரத கருத்திட்டம், கொட்டா வீதி, கொழும்பு 08.

9. உயர் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் குறுகிய பட்டியலில் இடம்பெறும் விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவதுடன், திறமையின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும்.

**செயலாளர்**

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

07ஆம் மாடி, செத்சிறிபாய IIஆம் கட்டம்

பத்தரமுல்லை